





துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.9.2025) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் பழைய வியாசர்பாடி திட்டப்பகுதியில் 34.61 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 192 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை திறந்து வைத்து ஒரு பயனாளிக்கு குடியிருப்பிற்கான ஒதுக்கீட்டு ஆணையினை வழங்கினார். இந்நிகழ்வில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி. சேகர், ப.தாயகம் கவி, ஆர்.மூர்த்தி, ஜே.ஜே. எபினேசர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி. சிங், இணை மேலாண்மை இயக்குநர் திருமதி. ந.ப்ரியா ரவிச்சந்திரன், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக் குழு தலைவர்கள், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில்

# தமிழ்நாடு முழுவதும் நான்கரை ஆண்டுகளில் 6 ஆயிரம் கோடி ரூபாயில் 52 ஆயிரம் வீடுகள்!

## சென்னையில் நடைபெற்ற குடியிருப்புகள் திறப்பு விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை,செப்.14-**

**சென்னை பெரம்பூர் தொகுதிக்கு உட்பட்ட மூர்த்திங்கர் நகர் திட்டப்பகுதி 2இல், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில், ரூ.88.02 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள 648 குடியிருப்புகளையும், அங்கு அமைக்கப்பட்டுள்ள கால்பந்தாட்ட மைதானத்தையும், நேற்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.**

**மேலும், கோவை, திருப்பூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள 5 இடங்களில் ரூ.125.91 கோடி கட்டப்பட்டுள்ள 1332 அடுக்குமாடிக் குடியிருப்புகளையும் காணொலி மூலம் திறந்து வைத்தார்.**

**முன்னதாக, பெரம்பூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பழைய வியாசர்பாடி பகுதியில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் ரூ.34.61 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள 192 அடுக்குமாடி குடியிருப்புகளையும், இராயபுரம் தொகுதிக்குட்பட்ட மீனாம்பாள் சிவராஜ் நகரில் ரூ.46.72 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள 308 குடியிருப்புகளையும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் புதிய இல்லங்களைப் பெற்ற பயனாளிகளிடம் சாவிகளைக் கொடுத்து வாழ்த்திப் பேசினார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

வடசென்னையில் உள்ள ராயபுரம் மற்றும் பெரம்பூர் தொகுதிகளில், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாக சுமார் 295 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளைத் திறந்து வைத்து, அந்த வீடுகளுக்கான ஆணைகளைத் தந்து, உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

### அறிமுகம் தேவையில்லை

சென்னையில் இருக்கின்ற மீனாம்பாள் சிவராஜ் நகர், பழைய வியாசர்பாடி, மூர்த்திங்கர் நகர், புதுக்கோட்டையில் அரிமளம், திருப்பூரில் பாரதி நகர், செட்டிப்பாளையம், கோயம்புத்தூரில் ஜி.ஆர்.நகர், சித்தாபுதூர் ஆகிய 8 திட்டப் பகுதியில், இன்றைக்கு மட்டும் கிட்டத்தட்ட 5 ஆயிரம் குடும்பங்களுக்கு, அவர்களின் வீடுகளைக் கொடுத்திருக்கிறோம். இந்த வடச் சென்னை பகுதியைப் பொறுத்தவரைக்கும், இந்த இடமும் சரி, மக்களாகிய உங்களுக்கும் சரி எனக்கு அறிமுகம் தேவையில்லை. நான் ஒன்றும் உங்களுக்கு புதியவன் கிடையாது. பல முறை இங்கு வருகை தந்து, உங்களை எல்லாம் சந்தித்து இருக்கிறேன். சென்ற வாரம் கூட இந்த பகுதியில், செயல்படுத்தப்படுகின்ற மழைநீர் வடிகால் பணிகளை எல்லாம் அமைச்சருடன், சட்டமன்ற உறுப்பினர்களுடன், மக்கள் பிரதிநிதிகளுடன் வந்து தொடர்ந்து ஆய்வுகளை மேற்கொண்டு இருக்கிறேன்.

### மகிழ்ச்சியும் நெருக்கமும்

எத்தனையோ மாவட்டங்களுக்கு, இடங்களுக்கு சென்றாலும் வடசென்னை மக்களைப் பார்க்கும்போது ஒரு மகிழ்ச்சியும், நெருக்கமும் ஏற்படும். ஏனென்றால், வடசென்னையைச் சேர்ந்த மக்கள், மனதில் எந்தவிதமான கள்ளங்கபடமும் இல்லாத மக்கள். மனதில் உள்ளதை அப்படியே சொல்கின்ற மக்கள். உண்மையை அப்படியே பேசுகின்ற மக்கள். மனதில் ஒன்றை வைத்துக்கொண்டு, வெளியே ஒன்று பேசத் தெரியாத மக்கள். அதிலும் குறிப்பாக, வடசென்னை மகளிரின் பாசம் தனிப்பாசம். பாசம் மட்டுமல்ல, உங்களின் தைரியமும், வீரமும் இன்றைக்கு தமிழ்நாட்டிற்கே எடுத்துக்காட்டாக இருக்கின்ற மாவட்டம்தான் இந்த வடசென்னை.



வடசென்னை மாவட்ட மக்களின் மனதில் இடம் பிடித்துவிட்டோம் என்றால், தமிழ்நாட்டின் எந்த மாவட்ட மக்களின் மனத்திலும் இடம் பிடித்துவிடலாம். அப்படிப்பட்ட சிறப்பான மாவட்டம்தான் இந்த வடசென்னை. அப்படிப்பட்ட உங்களையெல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பை எனக்கு கொடுத்திருக்கின்ற துறையின் அமைச்சர் அண்ணன் அன்பரசன் அவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர் அவர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி அவர்களுக்கும், எனது நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### ‘குடிசையில்லா தமிழ்நாடு’

மனிதர்களின் அத்தியாவசிய தேவைகளில் மிகவும் முக்கியமானது இருக்க இடம். அந்தத் தேவையை நம் அரசும், நம் முதலமைச்சர் அவர்களும் தொடர்ந்து உங்களைப் பார்த்து, உங்களுக்குத் தேவையானவற்றை நிவர்த்தி செய்து வருகிறார்கள். ஒரு காலத்தில், சென்னை மாநகரில் பார்த்தீர்கள் என்றால், குறிப்பாக, இந்த வடசென்னையில் குடிசைப் பகுதி அதிகமாக இருந்தது. வடசென்னை மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் யாரும் குடிசையில் இருக்கக்கூடாது. ஒவ்வொரு குடும்பமும் கான்கிரீட் கூரையின் கீழ் இருக்க வேண்டும் என்று கலைஞர் அவர்கள் ‘குடிசையில்லா தமிழ்நாடு’ என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். அதனால்தான் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தை, 1970ஆம் ஆண்டு கலைஞர் தொடங்கினார். அந்த குடிசை மாற்று வாரியம் வந்த பிறகுதான், தமிழ்நாடு குடிசையில்லா கோபுரமாக, கோபுரத்தை விட உயரமான அடுக்குமாடி குடியிருப்புகளாக மாறி வந்தது. குறிப்பாக ஆட்சிக்கு வந்த இந்த நான்கரை வருடங்களில் மட்டும், கிட்டத்தட்ட 6 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில், 52 ஆயிரம் வீடுகளை இந்த வாரியம் மூலமாக நம் முதலமைச்சர் அவர்கள் மக்களுக்குக் கொடுத்திருக்கிறார். அதுமட்டுமல்ல, 18 லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு வீட்டு மனைகளுக்கான பட்டாவை நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்.

### பலநாள் கோரிக்கை

வீடு வேண்டும் என்பது உங்களின் பலநாள் கோரிக்கை. கோரிக்கை மட்டுமல்ல, அது உங்களின் உரிமை, கனவு. அந்தக் கனவையும், உரிமையையும் இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் நிஜமாக்கி கொடுத்திருக்கிறார். உங்களின் சட்ட மன்ற உறுப்பினர்கள் அண்ணன் ஆர்.டி.சேகராக இருக்கட்டும், இராயபுரம் சட்ட மன்ற உறுப்பினர் அண்ணன் ஐட்ரீம்ஸ் மூர்த்தியாக இருக்கட்டும், இவர்கள் என்னை ஒவ்வொரு முறை சந்திக்கும்போதும், இந்தக் குடியிருப்பு களை விரைவில் கட்டி முடித்து, மக்களின் உபயோகத்திற்குக் கொடுக்க வேண்டும் என்று, தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டே இருந்தார்கள்.

### உதவித்தொகை உயர்வு

நானும் தொடர்ந்து செயலாளர்கள், அமைச்சர்கள் மூலமாக ஆய்வுக்கூட்டங்களை நடத்தி, ஒவ்வொரு 15 நாட்களுக்கும் ஒருமுறை எந்த அளவில் பணிகள் நடைபெறுகின்றன, எவ்வளவு சதவிகிதம் முடிந்திருக்கிறது, எப்போது கட்டி முடித்து மக்களிடம் கொடுப்போம் என்று தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருப்பேன். ஏனென்றால், நம் முதலமைச்சர் அவர்களும், தொடர்ந்து இந்த திட்டங்களைப் பின்பற்றிக் கொண்டே இருந்தார்கள். அந்த வீடுகள் கட்டி முடிக்கப்படும் வரைக்கும் நீங்கள் அனைவரும் வெளியில் தங்கியிருந்தீர்கள். அதையும் முதலமைச்சர் அவர்கள் உணர்ந்திருந்தார். அதற்கான, உதவித்தொகையை முதல் கட்டமாக 8 ஆயிரம் ரூபாயை முதலமைச்சர் அவர்கள் கொடுத்தார். அது போதாது என்று நீங்கள், உங்களின் சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், உங்களின் அமைச்சர்கள் மாண்புமிகு முதலமைச்சரிடம் கோரிக்கை வைத்தார்கள். உடனே, முதலமைச்சர் அவர்கள் முதல் கட்டமாக கொடுத்த 8 ஆயிரத்தை, இரண்டாவது கட்டமாக அதை உயர்த்தி 24 ஆயிரம் ரூபாயாக கொடுத்தார்.

### 400 சதுர அடி பரப்பு

நம் முதலமைச்சர் அவர்கள் எடுத்த தொடர் நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த பலனாக, இன்றைக்கு வீடுகளுக்கான சாவிகள் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. வீடு என்றால், ஏதோ பேருக்கு கிடையாது. இன்றைக்கு உங்கள் ஒவ்வொருவருக்கும் 400 சதுர அடி பரப்பளவில் ஒரு பெட் ரூம், ஹால், கிச்சன் வழங்கப்பட்டுள்ளது. வீடு மட்டுமில்லை, உங்களின் சட்டமன்ற உறுப்பினர் உங்களின் குடும்பத்தில் ஒருவராக ஒவ்வொருவருக்கும் அரிசி, புடவை, வேட்டி என ஒரு மாதத்திற்கு தேவையான மளிகைப் பொருட்களை உங்களுக்கு ஏற்பாடு செய்துள்ளார். அவருக்கு தனிப்பட்ட முறையில் எனது வாழ்த்துகள், நன்றி.

### மகளிருக்கான விடியல் பயணம்

உங்கள் திட்டப் பகுதியில் தரமான சாலை வசதி, கழிப்பிட வசதி, பூங்கா வசதி, தெரு விளக்கு இப்படி எல்லா விஷயங்களையும் பார்த்துப் பார்த்து செய்திருக்கிறார் நம் அமைச்சர் அவர்கள். இங்கு நிறைய மகளிர் வந்திருக்கிறீர்கள். நம் நான்கரையாண்டு அரசு, மகளிருக்கான அரசாக, ஒவ்வொரு திட்டத்தையும் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தியிருக்கிறார். மகளிர் முன்னேற்றத்தில் அதிக கவனம் காட்டுகின்ற அரசாக நம் அரசு திகழ்ந்துகொண்டு இருக்கிறது. அதனால்தான், இங்கு ஒதுக்கப்படுகின்ற அத்தனை வீடுகளும் மகளிர் பெயரிலேயே பதிவு செய்யப்பட்டு, உங்களிடம் வழங்கப்பட்டுள்ளன. இனிமேல் நீங்கள்தான் இந்த வீட்டிற்கு உரிமையாளர்.

நம் முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரைக்கும், மகளிருக்கு என்னென்ன தருகிறோம் என்று வாக்குறுதி கொடுத்தாரோ, அதை ஒவ்வொன்றையும் நிறைவேற்றி வருகிறார். குறிப்பாக, ஆட்சிக்கு வந்ததும், முதலமைச்சர் அவர்கள் இட்ட முதல் கையெழுத்தே, மகளிருக்கான விடியல் பயணம் திட்டத்தில்தான். இந்த நான்கரை வருடத்தில் கிட்டத்தட்ட 770 கோடி முறை மகளிர் பயணித்துள்ளீர்கள். அதுதான் இந்த திட்டத்தின் வெற்றி. ஒவ்வொரு மகளிரும் மாதம் ஆயிரம் ரூபாய் இந்த திட்டத்தின் மூலம் சேமித்துள்ளீர்கள்.

அடுத்து, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். ஒவ்வொரு நாளும் 22 லட்சம் குழந்தைகள், காலையில் எழுந்து பள்ளிக்கூடத்திற்குச் சென்றால், முதலில் தரமான காலை உணவு வழங்கப்பட்டு, அதன்பிறகு தரமான கல்வி தரப்படுகிறது.

மாணவர்கள் பள்ளிப் படிப்பை மட்டும் படித்தால் பத்தாது, உயர்கல்வி படிக்க வேண்டும் என்று, அரசு பள்ளியில் படித்து, உயர்கல்வி படிக்கின்ற மாணவர்களுக்கு, கல்வி ஊக்கத் தொகையாக மாதம் ஆயிரம் ரூபாய் நம் முதலமைச்சர் அவர்கள் தமிழ்ப்புதல்வன், புதுமைப்பெண் திட்டம் மூலமாக வழங்கி வருகிறார்கள். இதன் மூலம் 8 லட்சம் மாணவ, மாணவிகள் பயனடைந்துள்ளார்கள். அதேபோல, கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம். 2023ஆம் ஆண்டு, இதே செப்டம்பர் மாதம் முதலமைச்சர் அவர்கள் அந்த திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். இதன் மூலம் ஒவ்வொரு மாதமும் சுமார் ஒரு கோடியே 15 லட்சம் மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகையை மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் கொடுத்துக்கொண்டு இருக்கிறார் நம் முதலமைச்சர் அவர்கள். சில இடங்களில் எங்களுக்கு கொடுக்கவில்லை என்ற குறைகள் இருக்கின்றன. இப்போது முகாம் நடத்தியிருக்கிறோம். முகாமில் 40 சதவிகிதம் பேர் மீண்டும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைக்குதான் விண்ணப் பித்துள்ளீர்கள். முதலமைச்சர் சில விதிகளைத் தளர்த்தியுள்ளார். நிச்சயம் இந்த முறை விடுபட்ட, தகுதியான மகளிருக்கு மகளிர் உரிமைத் தொகையும், நம் முதலமைச்சர் அவர்கள் வழங்குவார் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

### இரயில்வே சுரங்கப் பாதை

நம் அரசுக்கு நீங்கள் கொடுக்கின்ற ஆதரவு, உங்களுக்காக உழைக்க முதலமைச்சர் அவர்களுக்கு முழு உற்சாகத்தையும், உத்வேகத்தையும் எங்களுக்குத் தந்துக்கொண்டு இருக்கிறது. நம் அரசு அமைந்தபிறகுதான் தென்சென்னைக்கு இணையாக, வடசென்னையை வளர்த்தெடுக்க வேண்டும் என்று பல்வேறு திட்டங்களை நாம் செயல்படுத்திக்கொண்டு இருக்கிறோம். குறிப்பாக, வடசென்னை வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில் 8 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு பல திட்டங்களை, முதலமைச்சர் அவர்கள் அறிவித்து, ஒவ்வொன்றாக செயல்படுத்தி வருகிறார்கள்.

இந்த பகுதிகளில் பெரம்பூர் கணேசபுரம் பாலம், ஆர்.கே.நகர் தொகுதியில் உள்ள கொருக்குப்பேட்டையில் பல பாலங்கள், இராயபுரம் போஜராஜன் நகரில் இரயில்வே சுரங்கப் பாதை, ஆர்.கே.நகரில் ஸ்போர்ட்ஸ் காம்ப்ளக்ஸ், பெரம்பூரில் 630 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகம் சீரமைக்கின்ற பணி, பல்வேறு பேருந்து நிலையங்களை மேம்படுத்துகின்ற பணிகள், புதிய நூலகங்கள், சமூகநலக் கூடங்கள், பெரியார் நகர் புறநகர் மருத்துவமனை, குடியிருப்புகள் என்று, ஏராளமான திட்டங்களைத் தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருக்கிறார் நம் முதலமைச்சர் அவர்கள். இன்னும் பல திட்டங்கள் இந்த வடசென்னைக்கு வர இருக்கின்றன. இதன் ஒரு பகுதியாகத்தான் இந்த வீடுகள் உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளன.

### உங்களின் பங்களிப்பு

இன்று நாம் வீடு வாங்கிவிட்டோம், சொந்த வீடு கிடைத்துவிட்டது என்று, நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். அதோடு நின்றுவிடக்கூடாது. அரசு இந்த வீடுகளை உங்களுக்குக் கொடுத்தாலும், உங்களின் பங்களிப்பும் இந்த வீட்டில் இருக்கிறது. உங்களின் பல வருட சேமிப்பில் இருந்து அந்தத் தொகையைக் கொடுத்திருப்பீர்கள். நகையை அடகு வைத்தோ, தெரிந்தவர்களிடம் கடன் வாங்கியோ இந்தத் தொகையை நீங்கள் கொடுத்து இருப்பீர்கள். ஆகவே, இந்தக் குடியிருப்புகளை நீங்கள் பொறுப்போடு பராமரிக்க வேண்டும் என்று உங்களைத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, தனியார் குடியிருப்புகள் போல உங்களுக்குள் ஒரு சங்கத்தை நிறுவி பராமரியுங்கள். உங்களுக்கு நம் திராவிட மாடல் அரசு, அனைத்து வகையிலும் துணை நிற்கும். உங்களுக்காக உழைக்க முதலமைச்சர் அவர்கள் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, நீங்களும் நம் அரசுக்கும், நம் முதலமைச்சருக்கும் பக்கபலமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு புதிய வீடுகளில் குடியேற இருக்கின்ற உங்கள் அத்தனைப்பேரின் வாழ்க்கை செழிக்கட்டும் என வாழ்த்தி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், தாயகம் கவி, ஐட்ரீம்ஸ் மூர்த்தி, எபினேசர், அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர் காக்கர்லா உஷா ஐ.ஏ.எஸ்., நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் ஸ்ரேயா சிங் ஐ.ஏ.எஸ்., சென்னை மாநகராட்சி நிலைக் குழுத் தலைவர்கள் இளைய அருணா, சர்ப ஜெயதாஸ், மண்டலக்குழுத் தலைவர் நேதாஜி கணேசன், மாநகராட்சி வட்டாரத் துணை ஆணையர் கட்டா ரவிதேஜா ஐ.ஏ.எஸ்., வாரியத்தின் இணை மேலாண்மை இயக்குநர் பிரியா ரவிச்சந்திரன் ஐ.ஏ.எஸ்., மாமன்ற உறுப்பினர் ஆனந்தி, பகுதிக் கழகச் செயலாளர்கள் ஜெயராமன், முருகன், சுரேஷ், செந்தில்குமார், ஜெபதாஸ் பாண்டியன், லட்சுமணன் மற்றும் அரசு அதிகாரிகள், அலுவலர்கள், கழக முன்னணியினர் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.






